உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

ஐம்பதாந் தொகுதி.

**Volume 50.**

விஜய—ஜய வருஷ

**1953–1954**

பத்திராசிரியர் — திரு. நா. அப்பனையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

# செந்தமிழ் ௫௰-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்.


திரு. நா. அப்பனையங்கார், *பத்திராசிரியர்.*

*சிந்தாமணி விளக்கம்: சீவகன் பெயர்* ௧, ௩௩, ௬௫, ௯௭, ௧௨௯, ௧௯௩, ௨௨௫, ௨௫௭, ௩௨௧.

*அநுதாபக்குறிப்பு* ௯, ௩௮௦.

*கொழும்பில் முத்தமிழ் விழா* ௫௯

*மதிப்புரை* ௬௧, ௧௨௭, ௧௯௦, ௨௫௩.

*இணைச்சொல் விளக்கம்* ௧௯௧

திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், M. A., B. O. L. *கொழும்பு.*

*வளருந் தமிழ்* ௯௧, ௧௨௦, ௧௫௫, ௨௭௦.

திரு. பண்டிதர், இராமசுப்பிரமணிய நாவலரவர்கள், *தக்கலை.*

*தமிழ்ச் சௌந்தரிய லகரி ஆராய்ச்சி* ௨௪௯, ௨௭௫, ௩௧௫, ௩௩௫, ௩௮௧.

திரு. மா. இளையபெருமாள் அவர்கள், B. A. Hons. *திருவனந்தபுரம்.*

*சமயவாழ்வு* ௩௩௭

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B. A., B. L *மதுரை.*

*இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை* ௭, ௧௩௭, ௧௯௮, ௨௭௯, ௩௨௭.

திரு. T. N. கிருஷ்ணையங்கார் அவர்கள், *திருவனந்தபுரம்.*

*குலசேகராழ்வார்* ௧௭௯

*மகரக்குழையார் திருவாராதனக் கவிகள்* ௨௮௩, ௩௧௦.

திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M, A., B. O. L. *மயிலம்.*

*சங்ககால மன்னர்கள்* ௯, ௩௬, ௭௧, ௧௦௫, ௧௪௧.

*கீழ் நீர்* (Water Springs) ௧௮௯, ௨௧௯.

*கரிகாலர் மூவர்* ௨௩௧

*சகுனத்துள்—காகம்* ௨௯௩

*கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் செங்குட்டுவனா?* ௩௦௫

நெடுஞ்செழியன் ௩௩௦

சகுனத்துள்—நாய் ௩௭௩

திரு. சத்தியவாகீசுவரையவர்கள், திருவனந்தபுரம்.

நாலடியார் திருத்தவுரை ௫௫

திரு. வித்துவான், ஆ. சிவலிங்கனார் அவர்கள், மயிலம்.

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் ௩௪௯, ௩௭௭.

திரு. வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள், அண்ணாமலைநகர்.

திருப்பெருந்துறை—கல்வெட்டுப்பாடல்கள் ௩௩௨

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A. மதுரை.

கம்பரும் துளஸிதாஸரும் ௫, ௧௧௭, ௧௭௦, ௨௩௫.

திரு. T. V. S. திருஞானசம்பந்தம் அவர்கள், M. A. அண்ணாமலைநகர்.

கிடைக்காத சில தமிழ் நூல்கள் ௧௪௯

திரு. பண்டித-சு. வே. நடராசன் அவர்கள், மதுரை.

அகவன் மகள் ௧௬௫

திரு. பண்டிதர், F. X. C. நடராசாஅவர்கள், மட்டுநகர், கொழும்பு.

இராமாயணம்—நூல் வரலாறு ௧௧௧

மகாபாரதம்-நூல் வரலாறு ௨௧௦

கிறித்து காலத்துத் தமிழ் மக்கள் ௨௩௮

திரு. வித்துவான், K. S. விசுவநாத சாஸ்திரி அவர்கள், P. O. L. திருப்பதி.

உள்ளுறை ௨௯, ௪௯, ௭௬, ௩௫௩.

உவமை முதலிய அணிகள் ௨௦௨

திரு. R. வீரபத்திரன் அவர்கள், M. A. திருவனந்தபுரம்.

உலாக்காட்சி ௧௫

மூவருலா ௨௮௯

உ

கடவுள் துணை


# செந்தமிழ்

தொகுதி-௫௰.] விஜய-௵-கார்த்திகை-௴ [பகுதி-௧.

Vol. 50. November—December 1953 No. 1.


## சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்


திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.


*சிந்தா மணியின் செழும்பொருளைத் தேர்ந்துணரும்*
*நந்தா விளக்கமென நல்லுரையை நானியற்றச்*
*செந்தா மரைத்திருமால் சேவடிகள் சிந்தையொளி*
*தந்தா தரித்துத் தளராமற் றாண்டிடுமே*

சிந்தாமணியின் காவியத்தலைவன் சீவகன் என்பதை யாவரும் அறிவர். அவனுக்கு அப்பெயர் வாய்த்த காரணம் மிகமிக அருமையுடையது. அதனை ஆழ்ந்து சிந்தித்து அநுபவிப்பது அருங்கலைவாணர்க்கு இன்பப் பொழுதுபோக்கு.

குழவிப்பருவத்தில் தெய்வம் 'சீவ' என்று வாழ்த்தினமையால் சீவகன் என்று பெயராயிற்று என அப்பெயர்க்காரணம் ஒருவகையாக உரைக்கப்படுவதுண்டு. ஆயினும் அவ்வளவில் நில்லாது அதனுட் பொதிந்து கிடக்கும் பொருள்நயங்கள் மிகப்பல. அவற்றை வெளிப்பட ஆராய்தல் இங்கு வேண்டற்பாலது.

சீவகன் என்னும் சொல்லுக்கு, சீவிப்பவன் சீவிக்கச் செய்பவன் என இருவகையாலும் பொருள்கொள்ள இயையும் என்பர். தான் வாழமுடியாத சூழ்நிலையில் வாழ்வுபெற்று விளங்கி, பிறரையும் வாழ்வித்த பெருந்தகை சீவகன் என்பதை அவன் வரலாற்று நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன.

*

சீவகன் பிறப்பு உயிர்வாழ இயலாத வூறுகள் மிக்கது. தாய் விசயமாதேவி கருவுற்றிருந்த காலத்தே, தந்தை சச்சந்த மன்னன் பகைவன் கட்டியங்காரனுல் உயிரும் அரசும் ஒருங்கேஇழந்தனன். அந்நிலையிலேதான் தேவி ஆற்ருமையால் பொறிகலங்கி, இடமும் காலமும் ஏற்பனவாகாமல், காதற்புதல்வனைக் கருவுயிர்ப்பாளாயி னள்.

பிள்ளை பிறந்த இடம் பிணம் சூழ்ந்த சுடுகாடு; காலம் இருள் சூழ்ந்த நள்ளிரவு. உற்றதுணை அங்கு ஒருவரும் இல்லை; பகைப் புலமாதலின் ஒற்றர் உணரின் உயிரச்சம் வேறு. அன்றியும் அங் குள்ள விலங்குகள் குழந்தையை மாய்வித்தலும் கூடும். இங் ஙனம் பிறர் எல்லார்க்கும் இறக்குமிடமாகிய இடுகாடுதானே சீவக னுக்குப் பிறக்குமிடமாக அமைந்த பெற்றியை நினைந்தால் இரங்கா தார் உளரோ?

அதனுல் இத்தகைய ஏதங்களை எண்ணி விசையை மிகவும் ஏங்கி அழுதனள். இதனைச் சிந்தாமணிகவி திருத்தக்கதேவர் கற் பவர் உள்ளம் கரைந்துருகுமாறு சிறந்த உரையோவியம் தீட்டியுள் ளார். அவலச்சுவையின் அச்சாணியாகும அவ் அரும்பெறற்பகுதி இலக்கியவுலகிலே இணையின்ருக உயர்ந்ததெனின் மிகையாகாது. ஆயினும் அதனை விவரித்து எழுதுதல் இங்கே வேண்டுவதின்று.

அங்ஙனமாகிய தாய்கூற்ருன பாடல்களிடையே 'மற்று இஞ் ஞால முடையாய் நீ வளருமாறும் அறியேனுல்' எனவும், 'நம்பி நீ தமியையாகிக் கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ' எனவும், 'ஏதிலார் இடர் பன்னூறு செய்யினும் செய்தவெல்லாம் தீதிலவாக என்று திருமுலைப் பால் மடுத்து' எனவும், 'துன் பழம் பகைதவ நூறுவாயென இன்பழக் கிளவியின் இறைஞ்சி ஏத்தினுள்' எனவும் வரும் இடங்கள் ஆழ்ந்து சிந்திக்கற் பாலன. இத்தகைய சூழ்நிலை யிற் பிறந்த சீவகன் சீவிப்பவனுதல் எங்ஙனம் இயலும்?

ஆயினும் சேயின் தவப்பயனுல் தெய்வம் துணைசெய்தது. அதனுல் தீங்குகள் யாவும் நீங்குவ ஆயின. விசையை தோழி சண் பகமாலை வடிவில் தோன்றிய அத் தெய்வம் தேவிக்குத் தேறுதல் அளித்தது. அதன் தூண்டுதலால் அவள் தலைவன் சச்சந்தன் பெயர் பொறித்த மோதிரத்தைக் குழந்தைக்கு அணிந்து மறைய நின்ருள். அப்போது அங்கு ஓர் அதியம் நிகழ்ந்தது.

அவ்வூர் வணிகன் கந்துக்கடன் என்பான் தன் மரித்த குழவியை மயானத்துப் புதைக்க அந்நள்ளிரவில் அங்கே வந்தான்; பெற்றோரின்றித் தனியே உயிருடன் கிடந்த பிள்ளையைப் பார்த்துப் பெருமகிழ்கொண்டான். கையிலிருந்த கணையாழியால் அஃது அரசிளங்குழவி என அடையாளங்கண்ட அவன், உடனே ஒருவரும் அறியாமல் மோதிரத்தை ஒளித்துக்கொண்டு, பிள்ளையைப் பேணிப் பெரும்பரிவோடு எடுத்த அளவிலே அது தும்மிற்று. அப்போதுதான் தெய்வம் அசரீரியாய்க் குழந்தையைச் 'சீவ' என்று வாழ்த்தியது.

> புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
> வனைமலர்த் தாரினான் மறைத்து வண்கையால்
> துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினான்
> சினைமறைத் தொருகுரல் சீவ என்றதே (323)

என்பது சிந்தாமணி.

பின்பு கந்துகன் தன் இறந்தபிள்ளையை இடுகாட்டிலேகிடத்தி மணிபோன்ற சீவககுமாரனை மார்போடணைத்து, விரைவாக வீடு சேர்ந்தான். அங்கே அழுதுகொண்டிருந்த மனைவி சுநந்தையை அவன் அருகே வரவழைத்து

> திருந்திய நின்மகன் தீதில் நீங்கினான்
> வருந்தல் நீ (327)

என்று தேற்றி, உயிருடனிருந்த பிள்ளையை அவள் கையில் உவகையோடு அளித்தான். [தீதில் நீங்கினான்-சாதலினின்றுந் தப்பினான்.]

இதற்கு முன் எல்லாம் சுநந்தை தனக்கு நன்மகப்பேறு வாயாமல் அருந்துயர்க்கடலில் அழுந்தியிருந்தனள். ஏனெனில் அவள் வயிறுவாய்க்கப் பெற்றவை அனைத்தும் குறைவாழ்நாட் குழவியாகவே மடிந்தன. அதனால் அவள் 'இறுதியாக இப்போது கருவுற்ற இம்மகவும் இறக்குமாயின் யானும் இறந்துபடுவேன்' எனச் சாவினைத் துணிந்து வேண்டியிருந்தனள்.

> செதுமகப் பலவும் பெற்றுச் சிந்தைகூர் மனத்தளாகி
> இதுமகவு அழியின் வாழேன் இறப்பல்யான் (1124)

என்பது அவளது அப்பொழுதை உட்கோளாக உணரப்படுகிறது. [செதுமக — சாப்பிள்ளை; உயிர்ப்பின்றி இறந்து பிறந்த குழந்தை.]

இந்நிலையிலேதான் கந்துகன் அவன்கையில் மைந்தனை அளித்து மனம் களிப்பூட்டியது. அதனால் அவள் முன்பு எண்ணி யிருந்த ஏக்கம் தீர்ந்து எல்லையில்லாத இன்பவாழ்வு எய்தினாள். இவ்வாற்றால் சீவகன் அவளையும் சீவிக்கச்செய்தவன் ஆயினான். இதுமட்டுமன்று. சீவகன் தம் இல்லத்திற் குடிபுகுந்த செய்தவப்பயனால், கந்துகனும் சுநந்தையும் நந்தட்டன்என்ற மற்றொரு நன்மகப் பேறும் வாய்ப்ப எய்தி மனைவாழ்க்கையின் மாண்பயன் நிரம்பினர்.

சீவகனுடைய குழவிப்பருவ நிகழ்ச்சியான இது, அவன் தன் புண்ணியப்பயனால் தானும்உய்ந்து பிறரையும்உய்வித்த வாழ்க்கை வரலாறுகள் எல்லாவற்றினும் மிக அடிப்படையான தொன்று. இங்ஙனமே மேலுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளும் விவரித்துக் காணல் வேண்டும்.

இனி, சீவகனுக்குக் கருவிலே பகையான கட்டியங்காரனும் அவனைச் சச்சந்தன் மைந்தனென்று சந்தேகம் கொள்ளவில்லை. அங்ஙனம் நேர்ந்த சூழ்நிலையும் மிக்க அருமையுடையது. இறும்பூது பயக்க இரவின்கண் நிகழ்ந்த இம் மகவுமாற்றத்தை ஊரவர் எவரும் உணராமை மட்டுமல்ல. மாதாவான சுநந்தைக்கே அஃது ஒரு மறைபொருளாக நிகழாநின்றது. ஏனெனில் கந்துகன் அவ்வுண்மையை அவட்கும் கட்டுரைத்தானில்லை யன்றே?

ஆகையால் இதுவரை மறித்துப் பிறந்த மக்களை யுடைய அவர் இல்லத்தில் இப்பொழுது சீவனுடன் பிறந்தான் செல்வ மகன் என்ற காரணத்தால், வலம்புரிகள் முழங்கின; வாச்சியங்கள் ஆர்த்தன. அம் மகிழ்ச்சியொலி கேட்ட மாற்றலன் கட்டியங்காரனுங்கூடக் களிப்புக்கடலில் மூழ்கினன். அதற்குக் காரணம் மேல் வருகின்ற விதிசெய்த விநோதமே யாகும்.

'அரசன் சச்சந்தன் இறந்ததால் அழுகுரல் நிரம்பிய ஆவண வீதியில் இருந்தும், கந்துகன் என்மீது கழிபெருங் காதலான்; எனது அரசாட்சியைப் பெரிதும் ஆதரித்து விரும்பினான். அதனால் அவன் தன் மகப்பேற்றுக்கு மகிழ்வான்போல, இங்ஙனம் என் வெற்றிவிழாவையே கொண்டாடாநின்றான்' என்ற எண்ணம் கட்டியங்காரன் கருத்தினில் நிலைத்தது. ஆகையால் அவன் மிக்க விழைவுடன் வளநிதி பலவும் 'வறியவர்க்கு ஈக' எனக் கந்துகனிடம் தந்து மகிழ்ந்தனன்.

அரசகுலத்தில் குழந்தை பிறந்தால், கொடைக் கடன் ஆற்று தல் அக்கால வழக்கம். அதனால் அவர்க்குப் பகைகெடும் என்று கருதினர். ஓர் அரசன் அருளோடு இரவலர்க்கு ஈகை உடையனு னல் அவன் பகைவர் தேய்ந்து மாய்வதும், அவன் அவ் அறம் செய் யாக்கால் அப் பகைவர் வளர்ந்து வாழ்வதும் ஆன்றவர் உறுதி யெனக் கடைப்பிடித்த உண்மை. சோழன் நலங்கிள்ளிக்கு உறை யூர் முதுகண்ணன் சாத்தனர் உணர்த்திய முதுமொழிக்காஞ்சி

அருளிலர்

கொடாமை வல்ல ராகுக
கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே. (புறம். 27)

என்றதிலும் இதுவே நோக்கு என உரைக்கப் பெறுகின்றது.

ஆகவே அரசகுலத்தினன் சீவகனுதலை ஆழியாலறிந்த கந்து கனும் அக் குலத்துக்குரிய தொழிலே செய்யக் கருதினன். அத னல் அவன் கட்டியங்காரன் அளித்த கருந்தனம் அனைத்தையும், தன் புதல்வன் போரிலே பகைவனை வெல்ல வேண்டி வறியவர்க்கு வழங்கியதோடு அமையாது, மேலும் கொடைக்கடன்பூண்டு ஒழுகுவானுயினன். இச் செய்தியைச் சிந்தாமணிச் செய்யுள் தெளி வாகச் சித்திரித்துள்ளது. அதில்

செருவிலம் பயப்புறச் செல்வன் செல்லுமே (331)

என்றது சிந்திக்கற்பாலது. அரசன் போர்செய்த இந்நகர் தன் னிலே சீவகனும் போர்செய்து பிறந்தபயன் உறவேண்டிக் கந்துகன் இவ்வாறு ஒழுகினன் என்பது நச்சினர்க்கினியர் நல்லுரையாகும்.

இங்ஙனம் குமரன் வாழ்விற்குக் கொடைக்கடன் இயற்றுமாறு மாற்றலன் பொருளை வழங்குவான் வகுத்த விதியின்வினையை என் னென்று வியப்பது? எனவே கட்டியங்காரன் தன் கேட்டிற்குத் தானே உதவிக்கொண்டானுக, சீவகன் பகை கடிந்து சீவிப்பவனு கச் செய்தற்கு இச் சூழ்நிலையும் இவ்வாறு துணைபுரிவதாயிற்று.

---

[தொடரும்]

# அநுதாபக் குறிப்பு

அருந்தமிழும் ஆரியமும் ஒருங்குகற்ற பெருந்தகையாளர் மஹாமஹோபாத்தியாய, பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் 24—10—53 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு மகிபாலன்பட்டியில் தம் இல்லத்தில் இறைவன் திருவடிநீழ லடைந்தார்கள். இவர்கள் பிரிவால் அலமரல் எய்தி நிற்கிறது தமிழகம்; அளப்பருந் துயர்க் கடலில் மூழ்கி யிருக்கின்றது தமிழ்ப் புலவருலகு.

காட்டுக்கோட்டை நகரவணிகர் மரபில் தோன்றி எழுபத்திரண்டாண்டு முதிர்ந்த இவர்கள், தமிழ்மொழிக்கும் சைவசமயத்திற்கும் செய்த திருப்பணிகள் மிகப் பேரளவின. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, இம் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆகிய இவை, இவர்கள் இயற்றிய தமிழ்த் தொண்டிற்கு என்றும் நன்றியறிதற் கடப்பாடுடையன. இவர்கள் இச்சங்கத் தனித்தமிழ் பரீக்ஷைகளுக்குப் பல ஆண்டு பரீக்ஷகராக விளங்கினார்கள்; அரிய பல ஆராய்ச்சி யுரைகள் எழுதியுதவி இச் செந்தமிழ்ப் பத்திரிகையைச் சிறப்புறச் செய்தார்கள். இன்னும் இவர்கள் இயற்றிய மண்ணியல் சிறுதேர், சுக்கிரநீதி முதலிய மொழி பெயர்ப்பு நூல்களும், கதிர்மணி விளக்கம் என்னும் திருவாசகப் பேருரையும் தமிழன்னையின் அணிகலனாய்த் தனிச்சிறப்புடன் திகழ்கின்றன.

இத்தகைய பேராசிரியராய் விளங்கின பண்டிதமணி அவர்களின் பிரிவால் பரிவெய்தி நிற்கும் அவர்கள் புதல்வர் முதலாயினோர்க்கு நம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெண்பா

மன்னவர்க்கு வாழ்வின் மருள்தீர் மணிவிளக்கம்
விண்ணவர்க்கும் தீர்ப்பான் விழைந்ததால்—கண்ணெனவே
உற்றார்க் கொளியான் ஒளியான் கதிரேசன்
மற்றோர்க்கும் என்றிசைக்கும் வான்.

# இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L., மதுரை.

அயோத்தியா காண்டம், தைலமாட்டுபடலம்—48.

தையல்தன் கற்புந்தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்டு
ஐயனும் போயினன் அல்லின் காப்பணே.

இதன் பொருள்:— இருட்டுக்குள்ளே இராமன் சென்றான்; சீதையின் கற்பும், தன் தகுதியும், தம்பி இலக்குமணனும், குற்ற மற்ற கருணையும், பொருள்களின் இன்பதுன்பம் நன்மைதீமை ஆகியவற்றைத் தன்னுடையவாக உணரும் உணர்வும், ஸத்ய நிஷ்டையும், செம்மையான தன் வில்லுமே தன் செல்வமாகக் கொண்டு சென்றான் : என்பது.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையா னரசருள் ஏறு (திருக்குறள்-381.)

'ஈண்டுக் குடி என்றது அதனை உடைய நாட்டினை. கூழ் என்றது அதற்கு ஏதுவாகிய பொருளை' என்பது பரிமேலழகர் உரை.

யாநிசா ஸர்வபூதானும் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸாநிசா பச்யதோ முனே:
(ஸ்ரீபகவத்கீதை, 2-69)

எல்லோருக்கும் எது இருட்டோ அதில் மனனசீலனை முனிவன் விழித்துக்கொண்டிருக்கிறான்; எல்லோரும் எதை வெளிச்சமென்று கொண்டு விழித்திருக்கிறார்களோ, அது ஸூக்ஷ்ம தத்வங்களைப் பார்க்கும் முனிவனுக்கு இருட்டாகும்.

மேலேகண்ட திருக்குறளையும் இந்த சுலோகத்தையும்வைத்து, இப்பாடலுக்குப் பொருள்செய்ய வேண்டும்.

வெளிப்படையாக உலகத்தோர் அரசனது உடைமை என்று நினைப்பவற்றையெல்லாம் துறந்து இராமன் காட்டுக்குச் செல்கிறான். இருட்டுக்கும் அப்பால் பரம்பொருள் இருக்கிறது. 'தமஸஸ்து பாரே' என்பது வேதப்பொருள். எது உலகத்தாருக்கு இருட்டு, அதில்தான் யோகி விழித்துக்கொண்டு பார்க்கிறான் என்பது கீதை.

இருட்டுக்குள்ளே மறைந்துபோன இராமனைக் கம்பர் தம் அகக்கண்ணால் காண்கிறார். அரசனுக்கு அவசியமான உடைமைகளாகத் திருவள்ளுவர் குறிப்பிட்ட அங்கங்கள் ஆறும், அகநிலையாக இராமனிடத்தில் அகலாமல் இருப்பதைக் கவியரசர் தாம் கண்டவாறு பாடுகின்றார்.

படை - செய்பதன்வில். தன் ஒரு வில்லாலே இராமன் தன்னை யும் உலகத்தையும் காக்க வல்லவனுதலின் சதுரங்கசைநியம் வேண் டாம் என்று கருத்து.

குடி - நாடு; உணர்வு. இராமனுடைய உணர்வுதானே அவன் காக்கும் எல்லாவுலகங்களும் அவற்றிலுள்ள எல்லா உயிர்களும். உணர்வு ஐம்பொறிகளால் அறிந்ததை ஊனிற்படியக்கொள்வது. "செயிரிலா வுலகினிற் சென்று நின்று வாழ், உயிரெலாம் உறைவ தோர் உடம்பு மாயினுன்" (பால, அரசியல், 10.) என்றபடி இவ னுணர்வே நாடு, குடியாகும். 'இந்த்ரியக்ராமம்' என்பதும் வழக்கு. "பொறியில்வாழ் நாகமெல்லாம்" என்பது திருமாலை, 13-வது பாட்டு.

கூழ் - பொருள்=செல்வம்; வாய்மை. இராமனுக்கு வாய்மை யினும் மேலான செல்வம் ஒன்று இல்லை.

அமைச்சு — கருணை. காரியாகாரியங்களில் இராமன் தன் கருணையொன்றையே அமைச்சாகக்கொண்டு அதன் வழியே செய லாற்றுபவன். கருணைக்குக் குற்றம் பக்ஷபாதம். ஆதலின் அஃது இல்லாத கருணை என்பதை 'மையறு' என்னும் அடைமொழியால் வெளிப்படுத்தினர்.

நட்பு - இஃது இருவகைப்படும். ஒன்று, தானிருந்த இடத்தில் தனக்கு உதவுவது; மற்றொன்று, வேறிடங்களிற் கொண்டுபோய் உதவுவது. 'தையல் தன் கற்பும் தன் தகவும்' என்பதனால் இவ் விருவகையும் கொள்ளப்படும். இவற்றுள் 'கற்பு' இலங்கைக்கு அழைத்து அரக்கரை அழிக்க உதவிற்று. மற்றொன்றாகிய 'தன் தகவு' எப்பொழுதும் உடனிருந்து உதவிவந்தது.

அரண் - தம்பி. இலக்குமணனே இராமனுக்கு விழித்திருக் கும்போதும் உறங்கும்போதும் பாதுகாப்பாய் நின்றான். "வரிவி லேந்திக், காலைவா யளவுந்தம்பி இமைப்பிலன் காத்துநின்றான்" என்ற கங்கைப்படலம் 48-வது பாடலும், "அல்லையாண்டமைந்த மேனி" என்று தொடங்கும் குகப்படலம் 42-வது பாடலும் நோக் கத்தக்கன.

தையல் தன் கற்பும் தன் தகவும் நட்பு, தம்பி அரண், மை யறுகருணை அமைச்சு, உணர்வு நாடு-குடி, வாய்மை - பொருள் - செல்வம்-கூழ், வில் படை; இவைகளோடு உலகத்தோருக்கு இருட்டில் மறைந்துசெல்லும் இராமன், அகக்கண்ணால் அவ்விருட்டி லுள்ளும் காணவல்லாருக்கு, ஸம்பூர்ணமான ஆந்தரியமான அரசச் செல்வமும் உடைமைகளும் ஒன்றுங்குறையாமலே காட்சியருள் கிறான் என்பது கவியின் தெளிந்த கருத்தாகும்.

# சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M.A. விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(முன் 49-வது தொகுதியின் 268-ம் பக்கத் தொடர்ச்சி)

## நலங்கிள்ளி

இவன் இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியின் மகன். இவன் நலங்கிள்ளி சேட்சென்னி எனவும் வழங்கப்படுவான். ஆதலின் இவன் சென்னி மரபினன் என்பது புலனும். நலங்கிள்ளிக்குப் பிற்பட்டவன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பார் ஒரு சிலர், நலங்கிள்ளி பெருநற்கிள்ளிக்குப் பிற்பட்டவன் என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இவன் பெரியதோர் நாட்டை ஆண்டனன். பகைவர் இவனைக் கண்டு அஞ்சினர். இவனிடம் பலவகைப் படைகள் இருந்தன. இவனைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார் ஆவர். இவனது தலைநகர் காவிரிப்பூம்பட்டினம். இவன் பகைவரை அடக்குதலிற் கண்ணும் கருத்துமாக இருந்தான். "கீழ்க்கடல் பின்னதாக மேல் கடலினது அலை நின் குதிரையின் குளம்பை யலைப்ப வலமாக நீ வருவையோ என்று வடநாட்டரசர் கலங்குகின்றனர்" எனக் கோவூர்கிழார் இவனைப் புகழ்ந்து போற்றியுள்ளார் (புறம் 33). ஆதலின், வடவரும் அஞ்சத்தக்க நிலையில் இருந்தவன் இவன் என்பது தெளிவாம். விறலியர் பூவிற்கு விலையாகப் பெறுக என்று மாடமதுரையையும் தருவன் (புறம் 32) எனக் கூறுவதனால், இவன் பேரரசன் என்பதும் இவனது வள்ளன்மையும் விளங்குகின்றன. புறம் 43, 225-ம் பாடல்களும் இவன் பேரரசன் என்பதை நன்கு விளக்குவன. இவன் பொருட் செறிவுபடச் செய்யுள் இயற்றும் திறனுடைய புலவன். இதனை இவன் பாடிய, புறம் 73 ம் செய்யுள் நன்கு விளக்கும்.

இவன் காலத்துத் தாயத்தார்க்குள் பகை மூண்டது. நெடுங்கிள்ளி என்னும் சோழமன்னன் ஒருவன் ஆவூரிலிருந்து அரசாண்டு வந்தனன். இந் நெடுங்கிள்ளி, கிள்ளிவளவனுக் குரியதாயிருந்த

உறையூரைத் தனதாக்கிக் கொண்டான் (புறம் 73). அவ்வுறையூரைக் கிள்ளிவளவனுக்குப் பிறகு—வளவன் குளமுற்றத்துத் துஞ்சிய செய்தி கேட்ட பிறகு—தன்னதாக்கிக் கொண்டிருக்க வேண்டும். இதனை யுணர்ந்த நலங்கிள்ளி சூளுரைத்து அவனோடு போருக்கெழுந்தான் (புறம் 75); ஆவூரை முற்றுகை யிட்டான். நெடுங்கிள்ளி கோட்டைக்கு வெளியே வாராது கதவடைத்துக் கொண்டு உள்ளேயே இருந்தான். இம் முற்றுகையால் நாடு இன்னலுற்றது. நாடு அல்லலுறும் நிலையினையறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்று, "நீ அறத்தை உடையையாயின் இது உனதன்றோ எனக் கதவைத் திறந்துவிடு. மறத்தை யுடையையாயின் போர் புரிக. இவ்விரண்டு மின்றி ஒளித்துக்கொண்டிருத்தல் நாணமுடைய செயலன்றோ?" என இடித்துரைத்தார் (புறம் 44). புலவர் அவ்வுரையைப் பொருட்படுத்த வில்லை. முற்றுகை வலுக்கவே நெடுங்கிள்ளி ஆவூரை விட்டு உறையூர்க் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டான். நலங்கிள்ளி அங்கும் சென்று முற்றுகை யிட்டான். அப்பொழுது, கோவூர்கிழார் இரு கிள்ளிகளையும் அணுகி, "ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே, இருவீரும் வெல்லுதல் இயல்புமன்று. நீவிர் இருவரும் போர் புரிவது பிறவேந்தர்க்கு மனக்களிப்பை யுண்டாக்குமே யன்றி வேறில்லை. ஆதலின் போரினைத் தவிர்க" என்றனர் (புறம் 45). இந் நிலையில் நலங்கிள்ளியிடம் பரிசு பெற்ற இளந்தத்தன் என்னும் புலவன் உறையூரிலுள்ள நெடுங்கிள்ளியைக் காணவந்தான். நெடுங்கிள்ளி அப்புலவனை ஒற்றன் எனக் கருதிக் கொலைபுரியத் துணிந்தான். இதனையறிந்த கோவூர்கிழார், "இவன் ஒற்றனல்லன், புலவன், இவனைக் கொல்லற்க" என்றார். நெடுங்கிள்ளியும் கொலைச் செயலை விட்டான். புலவனும் உயிர் பிழைத்துச் சென்றான்.

நலங்கிள்ளி உறையூரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தனன் எனப் புறம் 68-ம் செய்யுள் கூறுதலால், உறையூரை நெடுங்கிள்ளியிடமிருந்து வென்று கொண்டான் என்பதும், நெடுங்கிள்ளி இறுதியில் தோல்வியடைந்தனன் என்பதும் விளங்கும். இந்நெடுங்கிள்ளி, 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' எனக் குறிக்கப்படுவதால்,

நலங்கிள்ளியை வெல்லப் பலவாறு முயன்று, இறுதியில் காரியாறு என்ற இடத்தில் போரிட்டு இறந்தானாக வேண்டும்.

பாண்டி நாட்டில் அரண் மிக்க வலிய கோட்டைகள் ஏழு இருந்தன. அவற்றை நலங்கிள்ளி கைப்பற்றி, அவற்றில் தன் புலிக் குறியைப் பொறித்தான் (புறம் 33). இவன் புலவர்களையும் பாண் மக்களையும் ஆதரித்தவனாதலின், இவன் முத்தமிழையும் வளர்த் தவனாவான். இவன் பெரியோர்களது அறவுரைப்படியே நடந்து வந்தனன் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவன் பலர் துஞ்சவும் தான் துஞ்சாது உலகு காத்தவன் (புறம் 400). ஆதலின், செங் கோலன். இவன் காலத்தில் வானநூல் வல்லுநர் இருந்தனர். (புறம் 30). வானநூலார் கூறுவனவற்றை மக்கள் நம்பாமலும் இருந் தனர்; புலவர்களும் நம்பவில்லை (புறம் 30). இவனது ஆட்சியில் கடல் வாணிகம் சிறந்திருந்தது (புறம் 30, 400). ஓவியக்கலை உயர் நிலையில் விளங்கியது (புறம் 33). பலவகைக் கூத்துக்கள் ஆடப் பட்டன (புறம் 30).

## மாவளத்தான்

இவன் நலங்கிள்ளியின் தம்பி. தாமப்பல்கண்ணனார் என் னும் புலவர் இவனைப் புகழ்ந்து போற்றியுள்ளார். ஒரு நாள் இம் மாவளத்தான் அப்புலவருடன் வட்டாடினன். அவர் மறைக்க, இவன் வெகுண்டான்; வட்டை அவர் மீது வீசி எறிந்தான். உடனே அப்புலவர் 'நீ சோழர் மரபினனாயின் இங்ஙனம் செய் யாய்' என்றார். அதுகேட்ட மாவளத்தான் நாணி நின்றான். புல வரும் அவனைத் தேற்றி மகிழ்வித்தார் (புறம் 43).

## திருமாவளவன்

இவன் பட்டினப்பாலைத் தலைவன். பிற்காலப் புலவர்களால் இவன் கரிகாலன் எனவும் குறிக்கப்படுகிறான். வளவன் என்னும் பெயரொப்புமை பற்றியதேயாம் அக்கொள்கை. 'இவன் நலங் கிள்ளியின் தம்பி மாவளத்தான் ஆதல் வேண்டும்' என்பது மாவளத்தான், மாவளவன் என்னும் தொடர்களை நோக்கப் புலனாம்.

இவன் தாயத்தார் இவன்பா லழுக்காறுற்று இவனைப் பிடித்துச் சிறைக் கூடத்தில் அடைத்தனர். இவனைக் கொலை புரியத் துணிந்து சிறைக்கூடத்திற்கு எரியூட்டினர். இவன் எவ்வாறோ தப்பி வெளிப் போந்தான். மதிலைக் காவல் செய்துவந்த வாட்படைஞரைப் புறங்கண்டு தாயத்தாரை யொழித்து அரசுரிமையைக் கைக்கொண்டு அரியணை யமர்ந்தான் (பட்டி. 221-227).

இவன் பன்றிநாட்டின் ஒரு பகுதியினரான ஒளிநாகரை வென்றான்; தென்பாண்டி நாட்டை அடிப்படுத்தினான். கற்கா நாடு (பாலக்காடு), வேள் நாடு (திருவாங்கூர்), குட்டம் (கொச்சி), குடம் (தென்மலையாளம்), பூழி (வடமலையாளம்) ஆகிய நாடுகளை வென்று தனதாக்கிக் கொண்டான்; இடைநிலத்தவராகிய பொதுவரையும் இருங்கோவேள் முதலிய வேளிரையும் தன் கீழ்ப்படுத்தினான். அருவா (தொண்டை) நாட்டை யடைந்து ஆங்கு வாழ்ந்து வந்த குறும்பரை யடக்கி, அருவாளரை வென்றான். தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களிலும் அவ்வருவாளரை நிலைபெறச் செய்தான்; பின்னர், தென்பெண்ணையாற்றங்கரைப் பகுதியதாகிய மலையமான் நாட்டினை யடைந்து, மலையமானைத் தன் ஆட்சிக் குட்படுத்தினான்; வடக்கு நோக்கிச் சென்று, வேங்கடத்துக்கு அப்பாலிருந்த வடுகரையும் வென்றான்.

சிலப்பதிகாரத்திற் குறித்த கரிகாலன் இவனே யாதல் வேண்டும். காரணம் முன்னர் விளக்கப்பட்டுளது. இவன் காலத்துச் சோழப் பேரரசு வடபெண்ணையாறு முதல் குமரி வரையும் பரவியிருந்தது. இவன் காடுகெடுத்து நாடாக்கினான். இவன் காவிரிப் பெருக்கால் உண்டாகும் பெருந் தீமையை மாற்ற உளங்கொண்டு, ஆற்றின் இருமருங்கும் கரை யமைத்தான். பற்பல வாய்க்கால்களையும் மதகுகளையும் அமைத்துத் தண்ணீரை அழிவுறாமல் பாதுகாத்துப் பயிர்த் தொழிலைச் சிறப்புறச் செய்தான். இதனால், சோழநாடு என்றும் சோற்றுக்குப் பஞ்சமில்லாத நிலையை யடைந்தது. இவன் பல குளங்களை யமைத்தான்; கோவில்களைக் கட்டினான்; கோட்டைகளை யமைத்தான்.

இவனது தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்கரைப் பகுதியில் சோனகர், சீனர், சாவகர் முதலியவரும் வாணிபத்தின் பொருட்டு வந்து விடுதிகளை யமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். உள்நாட்டு மக்களும் அவர்களோடு கலந்து உறவாடினர். பௌத்த சமண வைதிக சமயங்கள் இவன் காலத்து விளங்கின. பூம்புகார் சிறந்த துறைமுகமாக விளங்கியது. ஏற்றுமதி இறக்குமதி யாகும் பொருள்களுக்குத் தீர்வை வரையறுத்துக் கடமை கொள்ளும் ஆயத்துறைகள் இருந்தன. அப் பொருள்களுக்குப் புலியிலச்சினையிட்டு அவற்றை வைத்துப் பாதுகாக்கும் பண்டசாலைகள் இருந்தன.

இவனது ஆட்சியில் தமிழ் செம்மையுற வளர்ந்தது. இவனைப் பட்டினப் பாலையால் பாடிய புலவர் உருத்திரங்கண்ணனார் என்பவர். இவன் அப் புலவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான். இவன், குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவன் எனக் குறிக்கப்படுவதால், குராப்பள்ளி என்னுமிடத்தில் உயிர் துறந்தான் என்பது புலனாம்.

## கோப்பெருஞ்சோழன்

இவன் பெருங்கோக் கிள்ளி எனவும் வழங்கப்படுவான். இவனது தலைநகர் உறையூர். இவன் சிறந்த புலவன், செங்கோல் வேந்தன், தத்துவ ஞானி. "இமயத்துக் கோடுயர்ந் தன்ன தம் மிசை நட்டுத் தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே" (புறம் 214) என இம் மன்னனே கூறுவதனால் இவனது தவநிலை யுணரப்படும்.

இவனுக்கும் இவன் புதல்வர் இருவர்க்கும் பூசல் நிகழ்ந்தது. அப்பூசலைப் புல்லாற்றூர் எயிற்றியனார் விலக்கினார். பூசலை விலக்குதற்கு மன்னனிடம் புலவர் புகன்ற செய்யுள் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டிய தொன்றாம்.

இவன் சிறந்த நண்பன். உயிர் நீங்கும் காலத்தும் நண்பர்களைப் பிரியாதவன். பாண்டி நாட்டுப் புலவரும் பாண்டியன் அறிவுடை நம்பியின் அவைக்களப் புலவருமாகிய பிசிராந்தையார் இம் மன்னனுக்கு உயிர்த்தோழர். இருவரும் ஒருவரை யொருவர்

காணாத நிலையிலேயே வாழ்நாள் இறுதிவரையிலும் நண்பர்களாக வாழ்ந்தனர். இத்தகைய நட்பு வியக்கத் தக்கது. இதனினும் வியத்தகு நிலையுடையது பிறிதொரு செயதி. அதாவது இம் மன்னன் இவ்வுலகப் பற்றினின்றும் நீங்கி உயர்நிலை எய்த, வடக்கிருக்கச் சென்றுழி, தன் நண்பர் பொத்தியாரிடம்; "தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும் பிசிரோ னென்பவென் னுயிரோம்பு நனே, செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லலன் மன்னே" என்று கூறியதாம். அதுகேட்ட புலவர் பிசிரோன் இவன் நண்பர் என்பதைக் காணாதவ ராகையால் வியப்பொடு ஐயுற்று நிற்ப, "தன்பெயர் கிளக்குங்காலை என்பெயர் பேதைச் சோழன் என்னும் சிறந்த காதற் கிழமையு முடையன், அதன்றலை இன்னதோர் காலை நில்லலன் இன்னே வருகுவன் ஒழிக்க வவற்கிடமே" (புறம் 216) எனக் கூறினர். அங்ஙனமே அப் புலவரும் வந்தனர். அப் புலவரைக் கண்ட பொத்தியார் சொல்லொணா வியப்பெய்தினர் (புறம் 217). அவரொடு பொத்தியாரும் வடக்கிருக்கச் சென்றுழி, மன்னன், 'புதல்வற் பெற்றபின் வருக' எனக் கூறிப் பொத்தியாரை அனுப்பிவிட்டான். பொத்தியாரும் தனக்குப் புதல்வன் பிறந்த பின், சோழன் நடுகல்லாயின விடத்தே சென்று, 'இடந்தருக' எனக் கேட்டுப் பெற்று மறைந்தனர் (புறம் 222, 223). பொத்தியார் பாடிய கையறு நிலைகள் நட்பின் திறத்தை நன்கு விளக்கும். (புறம் 220-223). பிசிராந்தையாரும் தூயவாழ்க்கை யுடையவர். அவரது வாழ்க்கைச் செம்மையை, "யாண்டு பலவாக நரையில வாகுதல்" என்னும் புறநானூற்றுச் செய்யுள் இனிது விளக்கும். பிசிராந்தையாருக்கு, இம் மன்னன்பா லுள்ள பற்று, "பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக் கோழி யோனே கோப்பெருஞ் சோழன், பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ வாயார் பெருநகை வைகலும் நக்கே" என்னும் புறநானூற்று 212-ம் செய்யுளால் நன்கு புலனும்.

[தொடரும்]

# உலாக் காட்சி

திரு. ஆர். வீரபத்திரன் அவர்கள் M.A. தமிழ் விரிவுரையாளர்,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகக்கல்லூரி, திருவனந்தபுரம்.

## I

திருவிதாங்கூரின் தலைநகராகிய திருவனந்தபுரத்தில், விஜயதசமி விழா பத்துத் தினங்களாகக் கொண்டாடப்படுகிறது. பத்மநாபன் அனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டருளும் ஆடகமாடத்தில் வைத்தே அவ்விழா நடைபெறுகிறது. மன்னர்பிரான் ஒவ்வொரு நாளும் கோவிலுக்கு வந்து விழாவிற் கலந்துகொள்கிறார். விஜயதசமி அன்று மாலையில் அவர் தம அரச சின்னங்களோடு கோவிலிலிருந்து எழுந்தருளி, பூஜைப்புரை எனனுமிடத்திற்கு அம்புவிடச் செல்வது வழக்கம். அதுவே விழாவின் இறுதிச் சடங்கு. மற்றெல்லா நிகழ்ச்சிகளைவிடவும் வேந்தன் வீதியில் உலா வரும் காட்சியே மக்களைப் பெரிதும் வசீகரிக்கிறது. அதனைக் காண்பதற்காக அந்நகரிலும் அயலிடங்களிலுமுள்ள மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு வருகின்றனர்.

விஜயதசமியன்று நண்பகலிலிருந்தே நகரமெங்கும் ஓர் பொலிவும் புத்துயிரும் காணப்படுகின்றன. நகரமாந்தர்கள் அரசர் உலாவரும் வீதியில் தோரணங்கள் அமைத்தும், குலைவாழை நட்டும், மாலைகள் கொடிகள் முதலியவற்றைக் கட்டியும் அலங்கரிக்கிறார்கள். நகராண்மைக் கழக ஊழியர்கள் ராஜபாதையைச் சுத்தம்செய்து வெண்மணல் விரிக்கின்றனர். வீடுகளில் பெண்கள் தம் சிறுவர் சிறுமியர்க்குப் பட்டாடை அணிந்தும், பணி பல புனைந்தும், சீவிச் சிங்காரித்தும், பொட்டிட்டும் பூவணிந்தும் அழகு செய்தபின் தாமும் விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்துகொண்டு உலாக்காணப் போதவற்குத் தயாராக இருக்கின்றனர். பிற்பகல் மூன்றுமணி சமயம் நகரின் பல பாகங்களிலிருந்தும் ஆடவர்கள் தம் பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அரசன் எழுந்தருளும் சாலையை நோக்கிக் கால்நடையாகவும் வாகனங்களிலேறி

யும் சென்றுகொண்டிருக்கின்றனர். அரைமணி நேரத்திற்குள் சாலையின் இருமருங்கும் மக்கள் திரளாகக் கூடிவிடுகின்றனர். அச்சாலையில் வந்துசேரும் கிளைப்பாதைகளில் நிற்கும் மக்களின் தொகுதி வாகனங்களின் இயக்கத்தைத் தடைப்படுத்தி விடுகிறது.

நான்கு மணி இருக்கும். கோட்டைக்குள்ளிருந்து அதன் கீழ வாசல் வழியாகப் பட்டத்துயானைகள் ஒன்றன்பின் ஒன்றாய் மெதுவாக வெளிவருகின்றன. அவற்றின் கொம்புகளில் கிம்புரியும், நெற்றியில் பொற்பட்டமும், முதுகில் சித்திரவேலைகளமைந்த பட்டுத்துகிலும் அணியப்பட்டுள்ளன. முதுகில் தொங்கிக்கொண்டிருக்கும் மணிகள் அவ்யானைகளின் அசைநடைக்கேற்ப கிண்-கிண் என்று ஒலிக்கின்றன. முதலில் நின்ற களிறு அரசர்க்குரிய அடையாளமாகிய சங்கும் யானைகளும் எழுதப்பெற்ற துகிற் கொடியைத் தாங்கி வருகிறது.

யானைகளுக்குப் பின்னால் செந்நிறமும் மதர் நடையும் வாய்ந்த குதிரைகள் அணியணியாக வருகின்றன. அவற்றின்மீது அமர்ந்த வீரர்கள் உடலில் அங்கியும், தலையில் பாகையும் அணிந்திருக்கின்றனர். அவர்கள் வலக்கையில் ஈட்டியைப்பற்றி இடக்கையால் குதிரைகளைக் கொண்டு நடத்தும்போது குதிரைகள் அசைந்தாடிவரும் தோற்றம் கண்ணுக்கு இனிய விருந்தளிக்கிறது.

குதிரை மறவர்களுக்குப் பின்னால் காலாட்படை வீரர்கள் வருகின்றனர். அவர்கள் முழு அங்கியும் தலைப்பாகையும் தரித்துத் துப்பாக்கியைத் தோளில் சாய்த்துப் பிடித்துக்கொண்டு போரிசைக் கருவிகள் எழுப்பும் இன்னிசையின் தாள அமைதிக்கேற்பக் கால்பெயர்த்து நடந்துசெல்கின்றனர்.

இவ்வாறு படைகளெல்லாம் பூஜைப்புரையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. சற்றுத் தொலைவில் சென்ற இசைக்கருவிகளின் ஒலியும் இப்பொழுது தேய்ந்து அடங்கிவிடுகிறது. அவ்வமைதியில் அரசாங்க உயர் அலுவலாளர்கள் அரையில் ஒன்றும் தோளில் ஒன்றுமாக இரண்டு ஆடைகளை அணிந்து ஒவ்வொரு வாளைக் கையிற் பிடித்துக்கொண்டு வரிசையாகச் செல்கின்றனர்.

அவர்களையடுத்து மன்னவர் வீற்றிருக்கும் மணிநெடுந்தேர் வருகிறது. அத்தேர் அழகிய வேலைப்பாடமைந்தது. எட்டு வெண்ணிறக் குதிரைகள் இரண்டு வரிசைகளாக நடந்து அதனை இழுத்துவருகின்றன. ஒவ்வொரு குதிரையையும் அதன் வாய்க்குள் பூட்டிய கடிவாளத்தை வெளிப்பக்கமாக நின்று பிடித்துக்கொண்டு வீரர்கள் மெதுவாக நடத்திவருகின்றனர். தேரினுள் மன்னர்பிரான் மாநிலந் தழைக்கத் தோன்றிய மகாராஜா், சித்திரைநாள் வந்துதித்த செம்மல் வீற்றிருக்கிறார். அவர் திருமுகம் சந்திரஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அவருடைய கமலக் கண்கள் மக்களின் ராஜபக்தியைத் திறைகொள்ளுகின்றன. தம் எழில்வாய்ந்த திருமேனியில் அவர் பொற்பட்டால் செய்த சட்டை தரித்திருக்கிறார். பொன்னும் மணியும் இழைத்துச் செய்யப்பெற்ற கிரீடம் அவர் நெற்றியை அலங்கரிக்கிறது. அவரைக் கண்டதும் மக்கள் சாக்ஷாத் திருமாலையே நேரில் கண்டவர்களைப் போல, பக்தியுடன் இறைஞ்சித் தொழுகின்றனர். மன்னர் அவ் வணக்கத்தைத் தம் செந்தாமரை முகத்தை மலர்வித்து, அங்கீகரித்தருளுகிறார். மன்னரைத் தரிசித்த மகிழ்ச்சியில் மக்கள் தம்மை மறந்து நிற்கும் போது அம் மன்னர் ஏறிவரும் தேர் அவர்களுக்குத் தெரியாமலே ஊர்ந்து முன்னே சென்று விடுகிறது. அதனையடுத்து இளங்கோ வீற்றிருக்கும் தேரும், அமைச்சரின் தேரும், அரண்மனைக் காரியக்காரர் தேரும், ஒன்றன்பின் ஒன்றாய்ச் செல்கின்றன. தேர்களுக்குப் பின் காலாள் வீரர்கள் செல்கின்றனர். அம்பாரிவைத்துக் கட்டிய சில யானைகள் பின்னணியில் செல்கின்றன.

இக் காட்சியை ஒருமுறை பார்த்தவர்களும் தம் ஆயுள்முழுவதும் மறவாமல் நினைவுகூர்வார்கள். இதனைக் காணும் பேறுபெற்றவர்களே கண்படைத்த பயனை அடைந்தவராவர் எனக் கூறுவதும் மிகையாகாது.*

---

* இந்தியா சுதந்திரம் பெற்றபின் திருவிதாங்கூரில் நிகழ்ந்த அரசியல் மாறுதல்களால் இவ்வுலா வரும் வழக்கம் சிலஆண்டுகளுக்கு முன்பே நின்றுவிட்டது. அதன் வைபவத்தை எதிர்காலத்தவர் அறிந்துகொள்ளும் பொருட்டு இங்கு சற்று விரிவாக எழுதப்படுகிறது.

அரைமணி நேரம் கழிந்திருக்கும். மன்னவர் தேர் சாலைக் கடை வீதியைத் தாண்டி அதன் கீழ்பாலமைந்த காமனை என்னும் ஊருக்குள் செல்கிறது. அங்கே பாதையின் இருபக்கங்களிலும் பலவீடுகள் அமைந்து இருக்கின்றன. அழகுற அலங்கரிக்கப்பட்ட அவ்வீடுகளின் தெருத்திண்ணைகளில் மக்கள் மன்னரைக் காண்பதற்காக நெருங்கி நின்றுகொண்டிருக்கின்றனர்.

அவ்வீடுகள் ஒன்றில் ஒரு இளநங்கை வாழ்ந்து வருகின்றாள். அரசர் பவனிவரும் வைபவத்தை அவள் இதற்குமுன் பலதடவை பார்த்தவள்தான். ஆனால் எல்லோரையும்போலப் பார்த்த அப்பொழுதில் மட்டும் மகிழ்ந்து விட்டுப் பின்னர் அதை மறந்தவளல்லள். அக் காட்சியில் அவள் உள்ளம் பெரிதும் ஈடுபட்டிருந்தது. அரசரது தோற்றமும் முகப்பொலிவும் அவள் இளமைஉள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்திருந்தன. அவற்றைத் தன் மனக்கண்முன் நிறுத்திப் பல தடவை அவள் பார்த்து மகிழ்ந்ததுண்டு. அவ்வேளைகளிலெல்லாம் அவள் புதியதோர் இன்பத்தை நுகர்ந்தாள். விஜயதசமியன்று மாலையில் மன்னர் நகர்வலம் வருவார் என்பது அவளுக்குத் தெரியும். நாள் தோறும் தன் மனக்கண்ணால் பார்க்கும் மன்னரை அன்று தன் மலர்க் கண்களால் காண விழைந்தாள்.

விஜயதசமியன்று காலை முதலே அவள் உள்ளம் களிநடம் புரிந்து கொண்டிருந்தது. வீட்டை மெழுகி முற்றத்தில் அழகாகக் கோல மிட்டாள். வண்ணமலர் பறித்துவந்து மாலையாகத் தொடுத்து வீட்டின் முன்புறத்தை அலங்கரித்தாள். பின் வீட்டிற்குள்ளிருந்த மன்னரின் திருவுருவப் படத்தை எடுத்துவந்து அதனை வெளித்திண்ணையில் ஒரு ஆசனத்தின்மீது வைத்து, அதற்குச் சந்தன குங்குமத் திலகமணிந்து பிச்சிப்பூவால் தொடுத்த மாலையைச் சூட்டினாள். இவ்வாறு மனையையும் மன்னவன் படத்தையும் அழகு செய்யும் ஆர்வத்தில் அவள் தன் உணவைக்கூட மறந்தாள். தாயார் நினைப்பூட்டி வற்புறுத்தியதன் பின்னர்த்தான் அவள் சிறிது உணவை உட்கொண்டாள்.

நான்குமணிக்கு முன்பே அரசரைக் காண்பதற்கு அவள் ஆயத்தமாகத் தொடங்கினாள். குளிர்ந்த நீரில் முழுகிக் கூந்தலை நன்றாக உலர்த்தினாள். பின்னர் அதனை ஒழுங்காக வகிர்ந்து, பின்னி முடித்துப் பூச்சூடினாள். கண்ணில் மையும் நெற்றியில் திலகமும் இட்டாள். தன்னிடமிருந்த விலையுயர்ந்த பட்டாடையை அழகுற உடுத்திப் பின்னர் அரசனைக் காண்பதற்குத் தன் கோலம் தகுதியுடையதுதானா என்பதை நிலைக்கண்ணாடியின் முன் ஒரு தரம் நின்று பார்த்தாள். புடவையின் முன்தானையை இழுத்து விட்டாள். நகைகளைத் திருத்தினாள். உடனே வெளித்திண்ணைக்கு ஓடிச்சென்று வீட்டின் இறைப்பைப் பிடித்துக்கொண்டு மன்னவர் தேர் வருகிறதா என்று உற்று நோக்கினாள். தேரைக் காணவில்லை. அரசர் வருகையை அறிவிப்பது போல அவருக்கு முன்னே நடந்து வரும் யானையின் மணியோசையும் கேட்கவில்லை. உள்ளே சென்றாள். சொற்பநேரந்தான் கழிந்திருக்கும்; மீண்டும் மன்னரைக் காணும் அவாவால் தலைவாயிலை நோக்கி விரைந்து வந்தாள். ஒரு நிமிஷம் கழிவதும் அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. முன்னே விரைந்துவந்து அரசரின் வருகையைத் தனக்கு அறிவித்து ஆறுதலளிக்காத யானையைச் சினந்துகொண்டாள். எதிர்வீட்டுத் திண்ணையில் அரசரைக் காணும்பொருட்டு உட்கார்ந்திருக்கும் இளைஞர்களின் பார்வை தன்மீது பலமுறை படிவதையும் அவள் கவனிக்கவில்லை.

தாயார் முதலில் தன் மகள், சிறுபிள்ளை, ஏதோ விளையாட்டு விருப்பால் இவ்வாறு செய்கிறாள் என நினைத்தாள். ஆனால் மாலைப்பொழுதாக ஆக, மகளின் உள்ளக்கிளர்ச்சியும், ஆரவாரமும், நடையும் ஓட்டமும் தாய்க்கு வெறுப்பையுண்டாக்கின. மற்றக் குழந்தைகளைப்போலிராமல் தன் மகள் ஆவேசங்கொண்டு அலைவது அன்னைக்குப் பிடிக்கவில்லை. "அரசரைக்காண்பதில் இவளுக்கு என்ன அவ்வளவு ஆர்வம்! அறிவில்லாப்பேதை, எதிர்வீட்டில் காளைப்பருவமுடைய ஆடவர்கள் நிற்பதைக்கண்டும் நாணுகின்றாளில்லை. தனது பருவத்தையும், அதற்குரிய ஒழுக்கத்தையும் பேணாது நடந்துகொள்கின்றாள். இது நமது

குலத்திற்கே இழிவைத்தருவதாகும். ஊர்ப்பெண்கள் அலரும் அம்பலும் கூறுவார்கள். அரசர் பவனிவருவதை இதற்குமுன் எத்தனையோ முறை பார்த்தவள் தானே. பருவம்வந்த நிலையில் இவ்வருடம், அதனைக் காணாதிருந்தால் என்ன கெட்டுவிடப் போகிறது?"—என்று எண்ணிய தாய் தன் மகள் வெளித்திண்ணையிற் செல்லாதபடி கதவை அடைத்தாள்.

தாயின் உள்ளத்தை மகள் அறிந்தாளா? அரசரைக்காணும் அவாவால் அவள் அடைத்த கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். மன்னன் வரக் காணாமையால் மீண்டும் உள்ளேபுகுந்தாள். இதற்குள் கொல்லைப்பக்கமாகச் சென்றிருந்த தாய், வீட்டிற்கு வந்தபோது கதவு திறந்திருப்பதைக்கண்டு, அதனைப் பின்னரும் அடைத்து வைத்தாள். மகளின் ஆர்வத்திற்கு அவள் அனுதாபம் காட்டவில்லை. உலக அபவாதத்திற்கு ஆளாகக் கூடாதென்ற எண்ணம் ஒன்றே அவள் உள்ளத்தில் முனைப்புற்றிருந்தது. தாயின் மனநிலையை மகள் அறியாதது போலவே மகளின் உள்ளத்தையும் தாய் உணர்ந்துகொள்ளவில்லை. அரசரது வடிவழகில் ஒன்றிநின்ற மகளின் மனம் இத்தகைய புறத்தடைகளைக் கண்டு அஞ்சிப் பின்னடையுமா? அடைத்த கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே வந்தாள்.

அப்பொழுதுதான் யானை அசைந்தசைந்து அங்கே வந்துகொண்டிருக்கிறது. "மன்னவர் இப்பொழுது வந்து விடுவார்" என்று சொல்லிக்கொண்டே அவள் தன் கோலத்தைத் திருத்தி அமைப்பதற்காக வீட்டிற்குள் கண்ணாடியின் பக்கமாக ஓடினாள். அவ்வேளையில் தாயார் விரைந்து வந்து கதவை அடைத்தாள். தனது கோலச் செவ்வியைப் பார்த்துவிட்டு விரைந்து மீளும் மகள் தாயார் கதவை அடைப்பதைக் கண்டு ஆத்திரத்துடன் அதனைப் பிடித்து இழுத்துச் சற்றே திறந்துகொண்டு இடையே நுழைந்து தெருத்திண்ணைக்கு ஓடினாள். அவள் அங்கு வந்ததும் அரசர் தேர்மிசைத் தோன்றித் தம் திருவுருவக் காட்சியை அவளுக்கு நல்கினார். மங்கையும் மன்னர் வடிவழகைத் தன் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தாள்.

மகள் மன்னரைக் காணக்கூடாதென்று தாயார் கதவைப் பல முறை அடைத்தும் யாது பயன்? மகள் ஒவ்வொரு தடவையும் அதனைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். கதவு அன்று, அவ்வொருநாளில் எத்தனையோ முறை அடைக்கவும், திறக்கவும் பட்டு அங்குமிங்கும் இயங்கிக்கொண்டிருந்தது. அவ் இயக்கத்தில் கதவு நிலையோடு பொருந்துவதற்கு இடமான குடுமி சற்றுத் தேய்ந்துகூடப் போயிருக்கும்.

## II

இவ்வாறு ஆடவரும் பெண்டிரும் கண்டுகளிக்க, திருவனந்தை மன்னர் தம் பரிவாரங்களுடனும் சின்னங்களுடனும் காட்சி வழங்கும் தருணங்கள் வேறும் சிலவுண்டு. பங்குனி ஐப்பசி மாதங்களில் ஸ்ரீபத்மநாப சுவாமி கோவிலில் நிகழும் பிரம்மோற்சவத்தின் இறுதியிலும், தமது பிறந்தநாளன்றும் மன்னர் உலாவரும் வழக்கமுடையார். பிரம்மோற்சவத்தின் கடைசி நாள் மாலையில் இறைவன் திருவுருவை யானை மீது எழுந்தருளப்பண்ணி, கடலாட்டுதற்குக் கொண்டுசெல்வர். அப்பொழுது அரசர் இறைவருக்கு முன்னே அவரது மெய்க்காப்பாளர் போல அரையில் உடுத்த ஒற்றை ஆடையோடு வாள்கைப்பிடித்துத் தன் சேவடி நிலத்தில்தோய நடந்து செல்வார். படைவீரர்கள் அவருக்கு முன்னும் பின்னும் அணிவகுத்துச் சென்றுகொண்டிருப்பர். இக்காட்சியை மக்கள் அந்நீண்ட பாதையின் இருபக்கங்களிலும் நின்று பார்த்து மகிழ்வர். கடலாட்டெனினும் இவ்விழா ஆறாட்டெனவே வழங்கப்படுகிறது. தென்னாட்டிலுள்ள கோவில்கள் பலவற்றிலும் இத்தகைய விழாக்களில் இறைவன் படிமத்தை ஆற்றில் நீராட்டுவதே பெருவழக்கு. அக்காரணத்தால் தோன்றிய ஆறாட்டு என்னும் பெயர் பின்னர்க் கடலில் நீராட்டுவதைக் குறிப்பதற்கும் அமைவதாயிற்றுப் போலும்!

திருவிதாங்கூர் மன்னர்கள் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த தமிழ்வேந்தர் மூவரிலும் முதல்வரான சேரரின் கால்வழியில் தோன்றியவராவர். சங்க காலத்தில் சிறந்திருந்த சேரர்களின் வரலாற்றைக் கூறும் பதிற்றுப்பத்து என்னும் நூலில் இக்கடலாட்டு

வைபவம் அழகாக வர்ணிக்கப்படுகிறது. அப்பாடலைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பெருமானவர். அவர் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்னும் சேரவேந்தனைப் பாடுமிடத்து அவன் நாட்டில் மக்கள் கடலாட்டு விழாக் கொண்டாடுவதனைச் சிறப்பிக்கின்றார். அவர் கூறும் விழாவும் இந்நாளில் திருவனந்தபுரத்தில் நிகழும் ஆறாட்டுவிழாவும் ஒன்றே என்பது அந்நூலின் உரையாசிரியர் அப்பாடலில் வரும் 'செல்வன்' என்ற சொல்லுக்குத் "திருவனந்தபுரத்துத் திருமால்" என உரை எழுதுவதால் அறியலாம். இதினின்றும் இவ் ஆறாட்டு விழாவின் தொன்மை துணியப்படுகிறது.

சோழநாட்டிலும் முற்காலத்தில் இக் கடலாட்டு விழா நடைபெற்றது. அங்கே ஆண்டுதோறும் தேசீயவிழாவாகப் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்த இந்திர விழாவின் இறுதியில் நகர மாந்தர்கள் கடலாடச் செல்லும் வழக்கமுடையார். கரிகாற் பெருவளத்தான் காலத்தில் நிகழ்ந்த ஓர் கடலாட்டு விழாவின் சிறப்பை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் ஒரு தனிக் காதையாக விரித்துப் பாடியுள்ளார்.

மன்னர் பிறந்தநாளை முன்னோர்கள் வெள்ளணிநாள் என்று வழங்கினர். மன்னன் அன்று தூய வெள்ளாடை புனைந்து மக்கட்குக் காட்சி வழங்கியதால் அந்நாளிற்கு அப்பெயர் அமைந்ததாதல் வேண்டும். சேரன் செங்குட்டுவனது பிறந்த நாளை மக்கள் கொண்டாடிய செய்தி சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. கண்ணகியின் உருவத்தைச் சமைப்பதற்கான கல்லை இமையத்திலிருந்து எடுத்துக் கங்கையாற்றில் நீர்ப்படை செய்து, கனகவிசயர் முடித்தலை ஏற்றிக் கொணர்தற்பொருட்டு வடநாடு சென்றிருந்த செங்குட்டுவன், அச் செயலை முடித்துக்கொண்டு அடுத்துவரும் தன் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக அதன் முன்தினமே வஞ்சிமாநகருக்கு மீண்டுவந்தான்

என்று இளங்கோவடிகள் பாடியிருக்கின்றார். இதுபோலவே பாண்டியன் நெடுஞ்செழியனது வெள்ளணிநாள் அவன் நாட்டு மக்களால் கொண்டாடப்பட்டதற்கு மதுரைக் காஞ்சியில் சான்றுகள் உள்ளன.

## III

சங்ககால இலக்கியங்களிலேயன்றிப் பிற்சான்றோர் நூல்களில் ஒன்றான முத்தொள்ளாயிரத்திலும் மூவேந்தரின் பிறந்தநாள் விழா, அவர் யானை, தேர் இவற்றின் மீது எழுந்தருளி நகர் வலம் வருதல் முதலிய பல செய்திகள் கூறப்படுகின்றன. விஜயதசமி விழாவில் ஸ்ரீசித்திரை மன்னர் பவனி வருவதை ஒத்த ஒருகாட்சியும் அவரைக் காண்பதற்குப் பேரார்வம் கொண்டு நின்ற பேதையின் செயலை ஒத்த ஒரு நிகழ்ச்சியும் முத்தொள்ளாயிரப் பாட்டொன்றில் மிக அழகாகவர்ணிக்கப்படுகின்றன. அப்பாடல் வருமாறு:

தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—ஆய்மலர்
வண்டுலாங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாம் வீதிக் கதவு.

சேரமன்னனுக்குக் கோதை என்ற ஒரு பெயரும் உண்டு. ஒரு கோதை வெற்றிமிக்க குதிரைகள் பூட்டப்பெற்ற தேரை ஊர்ந்து நகர்வலம் வருகின்றான். அவன் திருமார்பில் நறுமலரால் தொடுத்த மாலை அங்குமிங்கும் அசைந்து அழகு செய்கின்றது. அந்த நாண்மலரிலுள்ள மதுவைப் பருகுவதற்காக வண்டுகள் மொய்த்துக்கொண்டு முரல்கின்றன. இவ்வாறு மன்னனது மார்பில் புரளும் மாலையையும் தேரையும் அதிற்பூட்டிய குதிரைகளையும் புலவர் வர்ணித்ததிலிருந்து அவன் பிற சிறப்புக்கள் நம்மால் அனுமானித்துக் கொள்ளக் கூடியவையாக இருக்கின்றன. இவ்வாறு வரும் மன்னனின் வடிவழகில் ஈடுபட்ட ஒரு மங்கையின் செயலைக் கவிஞர் சித்திரிக்கின்றார். அப்பெண்ணின் ஈடுபாடு சாதாரணமானதல்ல. அவள்

மன்னன்மீது காதல்கொண்டுவிடுகிறாள். காதலும் மாசுமறுவற்ற தூய காதல்; தெய்விகக் காதல். மெய்யடியார் இறைவனிடம் வைக்கும் பக்திக்கு அதனை இணையாகக் கூறலாம்.

மங்கை தன் காதல் மிகுதியால் வீதியில் உலாவரும் மன்னனைக் காணத் துடிக்கின்றாள். உலகோர் பழிக்கு அஞ்சிய தாய் அதனைத் தடுக்க முயல்கிறாள். தாய் கதவைப் பலமுறை அடைத்து வைத்தாள். மகள் ஒவ்வொரு முறையும் அதனைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். முடிவில் மகளின் ஆர்வமே நிறைவேறிற்று. இதனால் தாய் தோற்றாள் என்றோ மகள் வென்றாள் என்றோ கூறுவது பொருந்தாது. உண்மைக்காதல் புறத்தடைகளையும், அலரையும், அம்பலையும் அடிப்படுத்தி வென்றது என்பதே பொருள்.

புலவர் இப்பாடலில் ஒரு கற்பனையை அமைத்துள்ளார். கற்பனையென்றால் சிலர் கருதுவதைப் போலக் கண்ணைக் குருடாக்கி, அறிவை மழுங்கச்செய்யும் மனோராஜ்யமல்ல. பாடலின் பொருளுக்கு வளத்தையும் வனப்பையும் அளித்துக் கற்பார் உள்ளத்தை அதில் ஈடுபடுத்தி இன்பம் ஊட்டும் ஓர் கவிதைப்பண்பாகும்.

தாயார் கதவைப் பலமுறை அடைத்ததாலும் மகள் அதனைத் திறந்ததாலும் கதவின் குடுமி தேய்ந்துபோயிற்று என்று கூறுவதிலே தான் கற்பனை அமைந்துள்ளது. மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்கு இது நம்பமுடியாத ஓர் பொய்யுரையாகத் தோன்றலாம். ஒரு நாளில் சிறிது நேரம் கதவு அடைக்கவும் திறக்கவும் பட்டால் பலமான குடுமி எப்படித் தேய்ந்து போகும்? என்று அவர் வினவக் கூடும். ஆயினும் கூர்ந்து நோக்கினால் அக்கற்பனை உலகியலோடும் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். வீதியிற் செல்லும் மன்னனைக் காண்பதற்காக வீட்டிற்குள்ளிருந்து வெளிவரும் மகள் கதவைத் திறப்பது இயற்கை. அதனைத் தடுக்க விரும்பும் தாய் அக் கதவை அடைத்து வைப்பதும் இயற்கை. இந் நிகழ்ச்சியில்

கதவு அங்குமிங்கும் ஆடி அசைவதும் இயற்கையே. ஒருகதவு நெடு நாளாகத் தன் குடுமியில் ஆடுமாயின் அக்குடுமி தேய்ந்து போத லும் இயற்கைதான். இவற்றை உடன்படுவதில் யார்க்கும் கஷ்டம் இல்லை; கற்பனையும் தேவையில்லை. ஆனால் மன்னன் வீதியில் எழுந் தருளிய அச்சிறு பொழுதிற்குள் குடுமிதேய்ந்து போயிற்று என் பதை ஏற்றுக்கொள்வதில்தான் கஷ்டம் ஏற்படுகிறது. அது இயற் கைக்கு மாறானதல்லவா? என்ற எண்ணம்உண்டாகிறது. உண்மை தான்; கவிஞனின் கற்பனை அங்கேதான் கால்கொள்ளுகிறது. காலம் இடையிட்டு நிகழும் அனுபவத்தை மிகச் சுருங்கிய கால அளவிற் குள் நிகழ்ந்ததாகக் கூறுவதிலேயே இக்கற்பனையின் மர்மம் அமைந் துள்ளது. ஆயினும் இதனை உணர்ந்துகொள்வதில் கஷ்டம் எதுவு மில்லை. பல ஆண்டுகள் கதவு இயங்குவதால் குடுமி தேய்ந்துபோவ தை அனுபவத்தால் அறிந்தவர்களுக்கு அந்நிகழ்ச்சி சில நாழிகைக் குள் நடந்துவிட்டது என்று அனுமானித்துக் கொள்வதில் அதிக சிரமம் தோன்றுவதற்கில்லையன்றோ?

இக் கற்பனையின் உண்மை முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படையின் ஈற்றில் அமைந்த ஒரு வெண்பாவாலும் விளக்கமெய்தும். அப்பாடலையும் காண்பாம்.

> அரிமா சுமந்த அமளிமே லானைத்
> திருமா வளவனெனத் தேறேன்—திருமார்பின்
> மானமா லென்றே தொழுதேன் தொழுதகைப்
> போனவா பெய்த வளை.

கரிகாற் பெருவளத்தான் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதை ஒரு மங்கை காண்கின்றாள். கண்டதும் அவள் கையிரண்டும் ஒன் றாகக் குவிந்து மன்னனுக்கு வணக்கம் செய்கின்றன. அதன் பின் அம்மங்கையின் கையில் செறிவுற்றுப் பொருந்திய வளைகள் தாமே கழன்று விழுந்து விட்டனவாம்.

இதைக் கேட்பவர்கள் "இது என்ன ஆச்சரியம்! என்ன அதிச யக் கற்பனை!" என்று எண்ணக்கூடும். அவர்களைப் போல நாமும்

அதனை வெளிப்பார்வையாகப் பார்த்து மலைவுறாமல் உள்நுழைந்து அதன் அமைப்பை ஆராய்வோம்.

மங்கையின் கைவளைகள் சோர்ந்து விழக் காரணம் என்ன? அவள் மன்னனைக் கண்டபோது அவன் மீது காதல்கொண்டுவிட்டாள். அக் காதல் தோன்றிய பொழுதே அவள் உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்கி வளர்ந்தது. ஆதலால் அவள் உடலும் அக்கணமே தீயில்விழுந்த மலர்போல மெலிந்தது. வளைகளும் உடனே கழன்று விழுந்தன.

சாதாரணமாக ஒரு தலைவி ஒரு தலைவனை முதன் முதலாகக் கண்டு அவன்பால் ஈடுபடும்போது அவள் உள்ளத்தில் தோன்றும் காதல் அரும்பி நிற்றலே இயற்கை. அக்காதல் வளர்ச்சியுற்று ஒருவர்க்கொருவர் இன்றியமையாத நிலையை அடைவதற்குச் சிலகாலம் வேண்டி வரும். அந்நிலையை எய்திய பின்னர், தலைவனது அருள் கிடைக்காமற் போனால் தலைவி அவனையே எண்ணி ஏங்கி இருத்தலும், உண்டிசுருங்கல் உறக்கம் தவிர்தல் முதலிய காரணங்களால் சின்னாட்களில் அவள் உடல் மெலிதலும் நிகழும். உடல் மெலியும்போது முன்னர் இறுக்கமாகப் பொருந்திய வளைகள் பெரிதாகிக் கழன்று கீழேவிழுவது இயல்பே. ஒன்றிரண்டு மாதம் நோய்வாய்ப்பட்டுப் படுத்தபடுக்கையாய் இருக்கும் பெண்களின் கையிலிருந்து வளைகள் கழன்று விழுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆகவே இக்கற்பனையின் பகுதிகளான மன்னனது காட்சி, மங்கையின் காதல் வளர்ச்சி, மங்கை மன்னனையின்றி அமையாத நிலை எய்துதல், தலைவன் அருளாதிருத்தல், தலைவியின் உடல் தளர்தல், தளை கழன்று வீழ்தல் ஆகிய இவையனைத்தும் உலகியலோடு பொருந்திய செயல்களேயாம். ஆனால் அவ்வுலகியலில் இத்தளை

நிகழ்ச்சிகளும் நங்கை தன் நாயகனை முதல்தடவையாகப் பார்க்கும் போதே நிகழ்ந்து விடுவதில்லை. காலம் இடையிட்டு நிகழ்வதற்குரிய அச்செயல்களனைத்தும் ஒரு கணப்பொழுதிற்குள் நிகழ்ந்து விட்டனவாகக் கூறுவதிலே தான் உலகியல் புறக்கணிக்கப்படுகிறது. இங்கேதான் கற்பனையின் உயிர்நிலையும் அமைந்துள்ளது.

இங்கு விவரித்த குடுமிதேய்தலும் வளைகழன்று வீழ்தலும் ஆகிய காலம் இடையிட்டு நிகழ்தற்குரிய நிகழ்ச்சிகளை வெறும் இயற்கையை ஒட்டியே கவிஞர் பாடியிருந்தால், அவை முற்றும் உலகியலாகிக் கற்பவர்தம் அறிவுக்கு வேலைகொடுக்காமலே தெரிந்துகொள்ளக்கூடியனவாக இருக்கும். ஆனால் அப்பொழுது அக் கவிதைகள் கவிஞரின் கருத்தையும் உணர்ச்சியையும் வெளியிடுவதற்குரிய ஆற்றலை இழந்துநிற்கும். அவற்றின் சுவை குன்றுவதோடு இன்ப ஊற்றும் வறட்சியடைகிறது. அக்காரணங்களால் பாடலில் அமைவதற்குரிய தகுதியும் அவற்றிற்கு இல்லாமலாகி விடும். ஆனால் அந் நிகழ்ச்சிகளையே ஒரு குறுகிய கால எல்லைக்குள் நிகழ்ந்தனவாகக் கற்பனையால் கூறும்போது அவை உலகியலிலிருந்து சிறிது வேறுபடினும் அறிஞர்கள் தம் நுண்மதியால் உய்த்துணர்ந்து இன்புறுமாறு அமைகின்றன. அந் நிலையில் அவை கவிஞரின் உள்ளுணர்ச்சியை அழகாக வெளிப்படுத்தி, அவ்வுணர்ச்சிகளைக் கற்பவர்உள்ளத்திலும் எழுப்பி இன்புறுத்துகின்ற ஆற்றலைப் பெறுகின்றன.

இவ்வாறு, மேற்போக்காகப் பார்த்தால் ஒரு முரண்போலவும் கூர்ந்து நோக்கினால் இயற்கையோடு பெரிதும் பொருந்துவதாகவுமுள்ள இக்கற்பனை, பாடல்களின் கருத்தை மிகமிக அழகுபடுத்துகின்றது. குடுமி தேய்ந்தது என்பதால் கதவின் இடையறாத இயக்கமும், அது அவ்வாறு இயங்குவதற்குக் காரணமான தாய்

மகள் இவர்களது முயற்சியும், அம்முயற்சியில் அவர்களைத் தூண்டிய அவர்களது உள்ளக்கொதிப்பும், உலகோர் பழிக்கு அஞ்சிய தாயின் மனச்சஞ்சலமும், அப்பழிப்பினின்று மகளைக்காப்பதில் அவட்குரிய ஆர்வமும் ஆத்திரமும், மகளுடைய காதலின் தூய்மையும் வலியும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன. பாடலின் கருத்துக்கு உயர்வையும் உணர்ச்சியையும் செழுமையையும் தருவது இக்கற்பனையே. இக்கற்பனை அமையப்பெற்ற காரணத்தாலேயே இக் கவிதை கற்பார் உள்ளத்தை உணர்ச்சியுடன் நேரே சென்று கௌவுவதோடு அதனை எண்ணும்பொழுதெல்லாம் அதில் கூறப்படும் நிகழ்ச்சியை நாடகம்போல் மனக்கண்முன் நடத்திக் காட்டவும் செய்கிறது. கற்பனை அமையாவிட்டால் அக்கவிதை உயிர்த்தத்துவம் நிரம்பியதாகாது. உயிரற்ற பிணம் போல அது உணர்ச்சியற்றுக் கிடக்கும். கற்பவர் உள்ளத்தில் அழகு இன்பம் முதலிய உணர்ச்சிகளை அது எழுப்புவதில்லை. அதற்குக் கவிதை என்ற புனித நாமத்தை வழங்குதலுமாகாது. கற்பனை கலவாத கவிகள் பெரும்பாலும்வெள்ளைப்பாடல்களாகவேஇருக்கும். அவை பகுத்தறிவுடைய மக்களுக்கு இன்பம் செய்தல் இல்லை. அறிஞர்கள் கலைவாணர்கள் ஆகியோர் வாழ்க்கையில்தோன்றும் சோர்வைக் கற்பனையும் கவிதைப் பண்பும் நிரம்பிய பாடல்களே அகற்றுகின்றன. அவற்றால் அவர்கள் வாழ்க்கை வளம்படுகின்றது. தளிர்க்கின்றது; பூத்துப் பொலிகின்றது; காய்த்துக் கனிகின்றது. இக்கற்பனைகள் அமையப்பெறாத பாடல்களைக் கற்றல் நீரும் நிழலும் அற்ற பாலைவனத்தில் பிரயாணம் செய்வதை ஒக்கும். அப்பாலைவனத்தில் வழிச்செல்வார்க்கு உண்ணீரும் தண்ணிழலும் தந்து சோர்வை அகற்றி ஆறுதல் அளிக்கின்ற பாலைநிலச் சோலைகளாக இக் கற்பனைகளைக் கருதுதல் தகும்.

---

# உள்ளுறை

திரு. வித்துவான் K. S. விசுவநாதசாஸ்திரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

நாம் கூறக்கருதும் பலவற்றையும் வெளிப்படையாகவே எவ்விடத்துங் கூற இயல்வதில்லை. இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்பச் சிறந்த முறையிற் பேசுகின்ற பேச்சே அறிவுடையோர்க்கு நல்விருந்தாயமைகின்றது. இந்நிலையிற் குறிப்புரைகள் மிகமிகச் சிறந்தனவாகின்றன. காவியஉலகிலோ இவை மிகவும் பாராட்டுதற்குரியனவாகச் சிறந்து விளங்குகின்றன. ஆதலினாலேயே தொல்காப்பியப் பொருளியல் இத்தன்மையவாய பொருள்களை விரித்துரைத்திருக்கின்றது. அப்பொருளியலுள் வருவன யாவும் அகத்திணை வழுவமைப்பே என்பர் நச்சினார்க்கினியர். பொருளதிகாரத்துச் சிறந்த பொருட்பகுதியே அதனுட் கூறப்படுகின்றது என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. இம்முடிவு [1]"தொல்காப்பியமும் தொனிகாவியமும்" என்ற தலைப்பில் விளக்கப்பட்டது.

நிற்க, பொருளியலுள் வரும் அறத்தொடுநிற்றலின் வகையாய் எளித்தல் ஏத்தல் முதலியனவும் வரைதல்வேட்கைப் பொருளவும் மற்றும் இத்தன்மையன பலவும் செய்யுட்கு வேண்டும் சிறந்த பொருளைக்கொண்ட குறிப்புரைகளே. இவற்றைக் கூறிச்செல்கின்ற தொல்காப்பியர் இவை அனைத்தையும் அடக்கி நிற்கின்ற உள்ளுறைகளையும் குறிப்பிடவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆதலின் அவ்வுள்ளுறைகளின் இயல்பையும் நன்கு ஆராய்ந்துணர்ந்து முறைப்படுத்திக் கூறி வைத்திருக்கின்றார். அவ்வுள்ளுறைகள்:— உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்தாம். இவை செய்யுட்கு இன்றியமையாச் சிறப்புடையன. இவற்றுள் நகை என்ற உள்ளுறை ஒன்று தவிர ஏனைய நான்கும் எச்சவுறுப்பில் வற்புறுத்தப் பெறுவன. நகை மெய்ப்பாட்டுறுப்பாகக் கொள்ளப்படும். இவை இவ்வாறாகின்றமை, [2]'தொனிப்பொருளுந் தொல்காப்பியமும்' என்ற தலைப்பில் தரப் பெற்றிருக்கின்றது.

[1] செந்தமிழ் 49: 83-98. [2] S. V. O. T. Journal XII. 2

## I உடனுறை

இனி உள்ளுறை ஒவ்வொன்றையும் தனித்தனியே கூர்ந்து காண்பதும் இன்றியமையாததாகின்றது. உள்ளுறை ஐந்தனுள் முதலது உடனுறை. இறைச்சியே இவ்வுடனுறை என்று சொல்கின்றனர். [1]'உடனுறை நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்து உடனுறையுங் கருப்பொருளாற் பிறிதொன்று பயப்ப மறைத்துக் கூறும் இறைச்சி' என்கின்றனர் நச்சினார்க்கினியர்.

[2]"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே"

என்கின்றது தொல்காப்பியம். உள்ளுறைந்து நிற்பதாய பொருள் உயிர்போல் மறைந்து நிற்க அதனை விளக்க அதன் புறத்தே அமைந்த உடல்போல் வெளிப்பட்டு நிற்கும் கருப்பொருள் இறைச்சி எனப்படும் என்றதாயிற்று. இதன்மேலும்,

[3]"இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே"

என்றலின் உள்ளுறைப் பொருளிற் செல்லும் பக்கத்தினைத் தெரிகின்றவர்கட்கு அவ்விறைச்சியிற் பிறக்கும் பொருளும் புலனும் என்பதும் கூறியதாயிற்று. இச்சூத்திரத்திற்கு உரைசெய்கின்ற நச்சினார்க்கினியர் உவமக்குறிப்போடு பிறபொருள்பட வருவதும் இறைச்சியின் இயல்பாமெனக் கொள்கின்றனர். இது ஆராய்ச்சிக்கு உரியது. பின் வாய்ப்பு நேருமிடத்து இதைப்பற்றி ஆராய்வோம்.

இனி இவ்விறைச்சி தானும் கொடுமை கூறும் வழியே பெரும்பாலும் இயல்வதென்பதும் அன்புறுதகுந இதனுட் சுட்டலும் சிறுபான்மை உண்டென்பதும்

[4]"அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"

என்றதனால் விளங்கும். எனவே, உள்ளுறையாக அமைந்த குறிப்புப் பொருள் பொதிந்த கருப்பொருள் இறைச்சி என்ற உள்ளுறையாகுமென்பதும், அதன் உள்ளுறை நோக்கை உணர்வார்க்கு அவ்வுள்

---

[1] தொல். பொருளி. 48. நச். உரை. [2] தொல். பொருளி. 35. [3] தொல். பொருளி. 36. [4] தொல். பொருளி. 37.

ளுறைந்த பொருளும், புலனாகுமென்பதூஉம் அது பெரும்பாலும் கொடுமை சுட்டுதற்கே வருமென்பதும் அதன்கண் அன்பு சுட்டுதலும் சிறுபான்மை உண்டு என்பதும் போதரும்.

## II உவமம்

இனி இரண்டாவது உள்ளுறையாகக் கூறப்படுவது 'உவமம்' என்பது. உவமத்தை உள்ளுறை உவமம் ஏனை உவமமெனை இரண்டாகப் பகுப்பதும் உண்டு. ஆனால் இவ்வுள்ளுறையுள் ஒன்றாக எண்ணப் பெறுவது உள்ளுறை உவமமேயாகும். உவமவியலில் முதற்கண் கூறப்படுவது ஏனை உவமம். இது உள்ளுறை எனறு கொள்வதற்குரியதன்று. இதனுள் பொதுத்தன்மை முதலியன மறைந்து நிற்றல் உண்டாயினும் அவை உவம உருப்புக்களாதலின் வெளிப்படவாராதவிடத்தும் வெளிப்படுக்கப்படும் இயல்பு உடையன. ஆதலின் உள்ளுறை உவமம் போன்ற அத்துணைச் சிறந்த உள்ளுறைத் தன்மை வாய்ந்ததன்று. ஆதலின் ஏனை உவமம், சிறந்த உள்ளுறைகளை எண்ணுகின்ற இவ்வுள்ளுறை ஐந்தனுள் ஒன்றாக நிற்குந் தகுதி உடையதும் அன்று. அதிகத் தகுதி உடையது உள்ளுறை உவமம் ஒன்றேயாகும். உள்ளுறைந்து நிற்பது உள்ளுறை ஆதலின், உய்த்துணர் வகைத்தாய் உவமம் ஒன்று உள்ளுறைந்து நிற்பது உள்ளுறை உவமம் என்றதாயிற்று. இவ்வுள்ளுறை உவமத்திற்குத் திணை உணர்த்தி நிற்கு மியல்பு இன்றியமையாதது என்பதும், அது அதற்கேற்றவகையில் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை இடமாகக் கொண்டு தோன்றுமென்பதும், ஒத்த பொருளொன்று உணரப்படுவதாய் அவ்விரண்டிற்கும் உள்ள அவ்வொப்புமையும் உள்ளுறுத்தப் பெற்றுளதென்பதும்

> "[1]உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
> தள்ளா தாகுந் திணைஉணர் வகையே" எனவும்
>
> "உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
> கொள்ளு மென்ப குறியறிந் தோரே" எ.வும்
>
> "உள்ளுறுத் திதனொ டொத்துப்பொருள் முடிகென
> உள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம்" எனவும்

---

1 தொல். அகத். 46, 47, 48

வருவனவற்றால் உணரப்படும். இதனால் ஏனை உவமத்திற்குத் திணை உணர்த்தல் வரப்புறத்தப் பெறுவதில்லை என்பதூஉம் பெறப்படும்.

[1] "ஏனை உவமந் தானுணர் வகைத்தே" என்றமையும் "ஏனை உவமமெனத் தள்ளாதாகும்" என்றமையும் இதற்குச் சான்றாம். ஏனை உவமமெனத் தள்ளாதாகும் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை நலிந்து பொருள் கொள்வதாகக் காணப்படுகின்றது.

## III சுட்டு

இனி உள்ளுறை ஐந்தனுள் எஞ்சி நிற்பன சுட்டு, நகை, சிறப்பு என்பனவாம். இவற்றின் விளக்கத்தைத் தொல்காப்பிய வாயிலாகக் காணவேண்டுமென்று உரையாசிரியர்கள் கருதியதாகத் தோன்றவில்லை. உள்ளுறை ஐந்தென எண்ணிய தொல்காப்பியர் இரண்டிற்கு மட்டும் விளக்கம் தந்து ஏனையவற்றை வாளா விடுத்துச் செல்வாரா? அங்ஙனம் அவர் சென்றாரென்றால் அது குன்றக் கூறலென்னுங் குற்றமாகாதா? இவ்வாறு சிந்தித்தல் இங்கே இன்றியமையாததாகின்றது. உரைகாரர்கள் இச் சிந்தனையோடு இவற்றிற்கு உரை காணவில்லை என்றால் அது அவர்களுடைய குற்றமாகாது. அவர்காலத்துச் சூழ்நிலை அவ்வளவிற்கு இடந்தரவில்லை என்றுதான் கருதவேண்டும். மிகப் பழமை வாய்ந்த ஒரு நூலுக்கு உரை செய்யுங்கால் அக்காலத்துச் சூழ்நிலையும் அதற்குத் துணைசெய்வதாகும் என்ற உண்மையைக் காண்டற்கு, உரையாசிரியர் உரையும் ஏனை நச்சினார்க்கினியர் முதலியோர்களின் உரைகளுமே எடுத்துக் காட்டாயமையும். இது நிற்க, இச் சுட்டு முதலாய உள்ளுறைகளுங்கூடத் தொல்காப்பிய வாயிலாகவே விளக்கங் காண்டற்குரியனவாக அமைந்திருக்கும் இயல்பு [2] செந்தமிழ் வாயிலாக முன்னரே தாப்பெற்றிருக்கின்றது.

[தொடரும்]

---

[1] தொல். அகத்-49. [2] செந். 49: 83-98.